**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.44/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கனி | த–பெ | முகமது உசைன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 41/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மெக்கானிக் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2025**

**1, 3 ம் எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) என்னை போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. எனது அப்பா பெயர் முகமது உசைன். நான் 8, மணிமேகலை தெரு, காரைக்குடியில் வசித்து வருகிறேன். அசா1 எனது பக்கத்து வீட்டுக்காரர் குடும்ப நண்பர். சம்பவ வீட்டிற்கு நான் எப்போது சென்றேன் என்றால் 11.00 மணிக்கு சென்றேன். என்ன காரணத்தால் சென்றேன் என்றால் அங்கு சத்தம் கேட்டு பார்க்கசென்றேன் அப்போது எதிரிகள் அவர்களை அடித்து கொண்டிருந்தார்கள். முதல் விசாரணையில் வீட்டில் இருந்தபோது தான் எதிரிகள் வந்தார்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு. அசா1 வலது கன்னம், வலது தோள்பட்டை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நான் சத்தம் கேட்டு போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அசா1 க்கும் எதிரிகளுக்கும் வீட்டு சம்பந்தமாக பிரச்சனை உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவ வீடானது அசா1 ன் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.22 10:04:30 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.44/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | உமர் பாரூக் | த–பெ | முகமது அப்துல்லா |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 59/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல் எஸ்டேட் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2025**

**1, 3 ம் எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) போலீசார் என்னை எப்போது எங்கு விசாரணை செய்தார்கள் என்றால் 08.09.2017 அன்று விசாரணை செய்தார்கள். சம்பவ வீட்டில் நானும் எனது சகோதரரான எதிரிகளும் கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் மட்டும் தான் குடியிருந்தோம். 1 வது எதிரி இக்பால் ரகுமான் என்பவருக்கு சம்பவ வீட்டை எனது தகப்பனார் 30.05.2016 அன்று இனாம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வீட்டை காலி செய்ய வேண்டி 1வது எதிரி 28.07.2016 அன்று காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். நாங்கள் விசாரணையில் சிவில் மூலமாக பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னோம். மேற்படி சிவில் வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் வீட்டில் இருந்த டிவி, வாசிங்மிஷின், பிரிட்ஜ் ஆகியவற்றை சேதப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் 5 நாட்கள் கழித்து எங்களுக்கு சொந்தமான பொருட்களான டிவி, வாசிங்மிஷின், பிரிட்ஜ் போன்ற பொருட்களை எடுத்து சென்றதாக கூறியுள்ளேனா என்றால் இல்லை சேதப்படுத்தியதாக தான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

2) பொருட்களை எதிரிகள் எடுத்து சென்றதாக முதல் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பீரோவில் இருந்த பான்கார்டு, எடிஎம் கார்டு, ஆதார் கார்டு ஆகியவற்றை எதிரிகள் எடுத்து சென்றதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ளதில் எனது போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். போலீசார் விசாரணையில் மேற்படி சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டிற்கு 10 அடையாளம் தெரியாத நபர்கள் வந்தார்கள் என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை போலீசார் விசாரணையில்

சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3) போலீசார் விசாரணையில் எதிரிகள் தாக்கியதில் கைகள், முழங்கால், நெற்றி ஆகிய இடங்களில் தான் அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 08.09.2017 அன்று வீட்டில் வைத்து எதிரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினோமா என்றால் இல்லை. நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தினோம் என்று எதிரிகள் சொல்கிறார்கள் என்றால் இல்லை. எதிரிகள் என்னை ஆபாசமாக பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் கொலைமிரட்டல் எதுவும் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ வீட்டிற்கு பணம் கேட்டு 1ம் எதிரியுடன் பிரச்சனை செய்தேன் அவர் பணம் கொடுக்காத நிலையில் எதிரியுடன் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.22 10:04:37 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.44/2022 P.W.7**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தாரிக் அன்வர் | த–பெ | உமர் பாரூக் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 27/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வெளிநாட்டில் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2025**

**1, 3 ம் எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1) நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன். உமர் பாரூக் எனது தந்தை. ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருகிறார். ஆஜர் எதிரிகளை தெரியும். அப்துல் அஜீஸ் என்பவரையும் தெரியும். 07.09.2017 அன்று நான் மௌண்ட்சியான் பொறியியல் கல்லூரியில் நான் ஒன்றாம் ஆண்டு படித்து வந்தேன். அன்றைய தினம் நான் எனது அண்ணன் உஸ்மான் அலி, எனது அப்பா உமர் பாரூக், எனது அம்மா சித்தி அய்ஷா ஆகியோர் எங்களுடைய காட்டு தலைவாசல் மணிமேகலை தெருவில் உள்ள 0/2A என்ற வீட்டில் இருந்தோம். சரியாக காலை 11.30 மணியளவில் நாங்கள் அனைவரும் அங்கிருந்தபோது ஆஜர் எதிரிகள் மற்றும் வழக்கின் மற்றொரு எதிரி அப்துல் அஜீஸ் ஆகியோர் அந்த சமயத்தில் அத்து மீறி உள்ளே நுழைந்து எங்களை பார்த்து வீடு எங்கள் பெயரில் உள்ளது வெளியே போடா என்று தேவுடியா மகனே என்ற கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டினார்கள்.

2) நானும் எனது தந்தையும் எதிரிகளிடம் ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு உங்களுக்கு எல்லாம் என்னடா மரியாதை என்ற சொல்லிக்கொண்டே எங்கள் வீட்டில் இருந்த பொருட்களாக டிவி, பிரிட்ஜ், வாசிங்மெஷின், பீரோ உள்ளிட்ட பொருட்களை சேதப்படுத்தி வீட்டின் வெளிபுறத்தில் தூக்கி ஏறிந்தார்கள். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று எனது அப்பா சித்தப்பாவிடம் கேட்டதற்கு எதிரிகள் மூன்று பேரும் ஒன்று சேர்ந்து கைகளால் எனது அப்பாவை முழங்கால், கை, நெற்றி, வலது கண் ஆகிய இடங்களில் அடித்தார்கள். உடன் இருந்த எனது அம்மாவையும் எதிரிகள் தாக்கினார்கள். இதில் எனது அம்மாவிற்கு தலை, கன்னம், வயிறு ஆகிய இடங்களில் வீக்க காயங்கள் ஏற்பட்டது. உடன் இருந்த என்னையும் எனது அண்ணனையும் கைகளால் தாக்கினார்கள். நான் ஓரளவிற்கு எதிரிகளை தடுத்தேன். எதிரிகள் அனைவரும் என்னையும் எனது குடும்பத்தாரையும் வீட்டை விட்டு வெளியே தள்ளி வீட்டினை பூட்டி சாவியை எடுத்துக்கொண்டார்கள்.

3) நாங்கள் அனைவரும் வெளியே இருந்தோம். அப்போது அப்துல் அஜீஸ் எங்களது சித்தப்பா இங்கிருந்து சென்று விடுங்கள் இல்லை என்றால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்கள். மேலும் எதிரிகள் மிரட்டி விட்டு சாவியை எடுத்து சென்று விட்டார்கள். இந்த சம்பவத்தில் காயம் பட்ட எனது தகப்பனாரை காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். நான் மற்றும் எனது அண்ணன் எனது அப்பாவிற்கு உதவியாக இரண்டு நாட்கள் இருந்தோம். பின்னர் 09.09.2017 அன்று காரைக்குடி வடக்கு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தேன். **புகார் அசாஆ 4**. இந்த சம்பவத்தில் அப்துல் அஜீஸ் என்பவர் தேவுடியா மகனே என்ற கீழ் நோக்கிய வார்த்தையால் திட்டினார். மேலும் சம்பவத்தில் எங்களை தாக்கியது இக்பால் ரகுமான், நசிர் அகமது ஆகியோர்கள் தாக்கினார்கள். இந்த சம்பவத்தின் போது எனது அம்மாவின் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் தாலி சங்கிலி காண வில்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) போலீசார் எங்களை எப்போது எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் 09.09.2017 அன்று சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். வேறு எந்த தேதியிலும் எங்களை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவ வீடானது கீழ்புறம் ஒரு வீடு மேல்புறம் ஒரு அறைஉள்ளது. மேற்படி வீடானது எனது தாத்தா முகமது அப்துல்லா அவர்களின் சம்பாத்தியத்தில் வாங்கியது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் தான் நாங்கள் எனது சித்தப்பா வீட்டினர் அனைவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் இல்லை நாங்கள் மட்டும் தான் வசித்து வந்தோம் 2007–2016 ஆண்டு வரை. கூட்டுக்குடும்பமாக எதிரிகளும் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

2) சித்தப்பா சம்பவ வீட்டை எனது பெயருக்கு முகமது அப்துல்லா எழுதி கொடுத்துவிட்டார் என்ற விபரத்தை சொன்னார் என்றால் சம்பவம் நடந்த தேதியில் இருந்து மூன்று மாதங்களுக்கு முன்பு தான் எங்களிடம் சொன்னார். அதற்கு அசா1 சிவில் நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார். மேற்படி விபரத்தை முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ வீடானது 30.05.2016 அன்று 1ம் எதிரி பெயருக்கு இனாம் பத்திரம் எழுதி கொடுத்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி எங்களையும் எனது சித்தப்பாவையும் வீட்டை காலி செய்ய சொல்லி 28.07.2016 அன்று காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆகையால் 28.07.2016 ம் அன்றே எங்கள் சித்தப்பாவான 1வது எதிரியான இக்பால் ரகுமான் பெயருக்கு எனது தாத்தா இனாம் பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம் தெரியும் என்றும் எங்கள் குடும்பத்திற்கு சம்பவ தேதியில் இருந்து மூன்று மாதங்களுக்கு முன்பு தான் தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) புகார் அளித்த பின்னர் எனது சித்தப்பா மேல் வீட்டில் இருந்து காலி செய்து சென்று விட்டார் என்றால் இல்லை அங்கு தான் குடியிருந்தார். சம்பவ வீடானது 1ம் எதிரிக்கு சொந்தமானது என்றும் அதனை காலி செய்ய சொன்னதால் தான் எதிரிகள் மீது முன் விரோதம் கொண்டு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. 29.11.2017 அன்று சார்புஆய்வாளர் முத்துகிருஷ்ணன் என்னை மீண்டும் விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கியுள்ளார் மேற்படி வாக்குமூலத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரை எதிரிகள் அபாசமாக திட்டினார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கு சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் என்னை எதிரிகள் கையால் அடித்து வலியை ஏற்படத்தினார்கள் என்று இருந்தால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது பொய் என்றால் தவறு. காயமானது எதிரிகளால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. புகார் மற்றும் வாக்குமூலத்தில் சம்பவ வீட்டில் சம்பவம் நடந்ததாக சொல்லும் போது நான் எனது தகப்பனார் தாயார் மற்றும் எனது சகோதரர் ஆகிய நான்கு பேர் மட்டும் தான் இருந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4) புகாரில் எதிரிகள் எங்கள் வீட்டிற்குள் வைத்து எனது தகப்பானரை அபாசமாக திட்டினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக நான் எனது புகாரில் கூறியுள்ள நிலையில் உயிருக்கு பாதுகாப்பு கேட்டு புகார் மனுவில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 08.09.2017 அன்று எதிரிகளை வீட்டிலேயே சந்தித்து எனது உறவினர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினோமா என்றால் இல்லை. 1 மற்றும் 3 ம் எதிரிகள் சென்னையில் வசித்து வந்தாலும் அவர்களின் பொருட்கள் சம்பவ வீட்டில் தான் உள்ளது என்றால் இல்லை. மேற்படி பொருட்கள் சம்பவ வீட்டில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடம் வீட்டை கேட்டோ அல்லது பணம் கேட்டோ மிரட்டினேன் அவர் பணம் தர முடியாத நிலையில் பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது கெட்ட உள் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.22 10:04:59 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி